DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.STC.340/2022

Prosecution witness – PW 5

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.சாரதா | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A2 present)
26.02.2026 at 12.55 P.M.

முதல் விசாரணை

1. நான் தற்போது மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 15.11.2021ம் தேதி சிக்கல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலையப்பொறுப்பில் இருந்த போது கீழக்கரை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த ராஜேஸ்வரி என்பவர் கொடுத்த புகார் வாக்குமுலத்தை பெற்று 21.20 நிலையம் வந்து சிக்கல் காவல் நிலையக் குற்ற எண்.161/2021 பிரிவுகள் 294(b), 323 இ.த.ச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். வாதியின் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

3. பின்னர் வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.11.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஜெயசக்தி மற்றும் ராஜகனி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. சம்பவ சாட்சிகளான சுலோச்சனா, நாகநாதன், ராமசாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. கடந்த 01.12.2021ந் தேதி மதியம் 12.30 மணிக்கு எதிரிகள் சாந்தி மற்றும் மகேஸ்வரி ஆகியோர்களை சிக்கல் பேருந்து நிறுத்ததில் வைத்து காரணம் கூற கைது செய்து தகுந்த அறிவுரையுடன் நிலையப்பிணையில் விடுவித்தேன்.

6. வழக்கில் காயம்பட்ட ராஜேஸ்வரிக்கு சிகிச்சை அளித்த கீழக்கரை அரசு மருத்துவனை மருத்துவர் திரு.பிரபாகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றேன். அதில் ராஜேஸ்வரிக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என கருத்துரை வழங்கியுள்ளார்.

7. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் சாந்தி, மகேஸ்வரி ஆகியோர்கள் மீது பிரிவுகள் 294(b), 323 இ.த.ச –ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது விசாரணையின் போது அ.சா.2 இவ்வழக்கு சம்பவத்தை பற்றி அவரது வாக்குமூலத்தில் உள்ளது தான் சொல்லியுள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்து 6 மணி நேரம் கழித்து தான் கீழக்கரை மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்தில் தகவல் கிடைத்தது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருநது கீழக்கரை அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டுமெனில் சிக்கல் காவல் நிலையத்தை தாண்டி செல்ல வேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடன் கைப்பேசி மூலமாக வேறு வழியிலோ எனக்கு சம்பவம் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமுலத்தில் எத்தனை மணிக்கு கீழக்கரை அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்று அ.சா.1 புகார் மனுவில் கூறவில்லை என்றால் நேரத்தை குறிப்பிட்டு கூறவில்லை. சிக்கல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் கீழக்கரை மருத்தவமனைக்கு சென்றதாக புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் அ.சா.1 கூறியுள்ளார்.

அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்பகை உள்ளது என்று என்னுடைய விசாரணையில் தெரியவரும் என்றால் முன்பகை பற்றி எனக்கு தெரியாது. ஆனால் இருதரப்பினரும் உறவினர்கள். முதல் தகவல் அறிக்கையிலும், குற்ற இறுதி அறிக்கையிலும் புகார் வாக்குமூலம் பதிவு செய்த நேரம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ளவர்களாக பார்வை மஜரில் காட்டப்பட்டுள்ள முருகன், ராமசாமி ஆகியோர்களை இந்த வழக்கின் சாட்சிகாள விசாணை செய்யவில்லை என்றால் ராமசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக இறுதி அறிக்கையில் காட்டப்பட்டுள்ள நபர்கள் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரியும், புகார்தாரரும் உறவினர்கள். என்னுடைய இறுதி அறிக்கையில் புகார்தாரரின் காது

கிழிந்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவர் அளித்த காயச்சான்றிதழில் புகார்தாரரின் காதில் ரத்தக்காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் புகார்தாரரை ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பியதாகவே அங்கு அவருக்கு சிகிச்சை அளித்ததாகவோ தெரியவரவில்லை என்றால் சரிதான். வாதி கொடுத்த ஒரு பொய்யான புகாருக்கு ஆதரவாக முதல் தகவல் அறிக்கை, மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/–சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி